


★ டாக்டர் நிர்மலா சுந்தர்ராஜன் ★ எம்பார் கண்ணன் ★ ஹரிகுமார் ★ பிரியதர்ஷினி கோவிந்த் ★ பூவராக மூர்த்தி

# இசை – இயல் – நாடகத்தில் சிறந்த ஐவர்: ஸ்ரீ தியாக பிரம்ம கான சபா "வாணி கலா சுதாகரா" விருது

## நெரூர் சாஸ்தா ஸ்ரீ வித்யா சங்கர சரஸ்வதி சுவாமிகள் அருளாசி

சென்னை, டிச 10–

**பிரபல தொழிலதிபர் டெக்கான் என் கே மூர்த்தி தலைமையில் சென்னை நகரில் வெற்றிகரமாக இயங்கி வரும் ஸ்ரீ தியாக பிரம்ம கான சபாவின் 45–வது ஆண்டு இசை – இயல் – நாடக விழா (2024–25) வாணி மகாலில் நேற்று கோலாகலமாக ஆரம்பமானது.**

விழாவை நெரூர் சாஸ்தா ஸ்ரீ ஸ்ரீவித்யா சங்கர சரஸ்வதி சுவாமிகள் துவக்கி வைத்து அருளாசி கூறினார். அதோடு டாக்டர் நிர்மலா சுந்தர்ராஜன் (வாய்ப்பாட்டு), எம்பார் எஸ் கண்ணன் (வயலின்), பி ஹரிகுமார் (மிருதங்கம்), பிரியதர்ஷினி கோவிந்த்( பரத நாட்டியம்), எம் பூவராக மூர்த்தி (நாடகம்) ஐவரின் கடந்த கால அரிய சேவையை பாராட்டி,"வாணி கலா சுதாகரா" என்னும் விருதை வழங்கி ஆசி கூறினார்.

ஆரம்பத்தில் சபையின் தலைவர் டெக்கான் என்.கே.மூர்த்தி வரவேற்புரை ஆற்றினார். அதில் சபா வெற்றிகரமாக 80வது ஆண்டில் அடி எடுத்து வைத்திருப்பதையும், 45வது ஆண்டு இசை – இயல் – நாடக விழா – 35வது பரதம் திருவிழா கோலாகலமாக துவங்கி இருப்பதையும், மகிழ்ச்சியோடும், பெருமிதத்தோடும் குறிப்பிட்டார்.

கடந்த காலங்களில் இருந்து இன்று வரை சபை ஆற்றி வந்திருக்கும் கலைச் சேவையையும், கௌரவிக்கப்பட்டு இருக்கும் கலைஞர்களையும் நினைவு கூர்ந்து, இளைய தலைமுறை கலைஞர்களையும் கௌரவித்து வரும் செயல்பாட்டையும் குறிப்பிட்டுப் பேசினார்.

### பிரமீளா குருமூர்த்தி

பிரபல இசை ஆய்வறிஞர் பிரமீளா குருமூர்த்தி, விருது பெற்ற 5 கலைஞர்களின் திறமையையும், கடந்த காலங்களில் அவர்களின் அற்புதமான கலைச் சேவையையும் நினைவு கூர்ந்தார்.

பக்தி சிரத்தையோடு செயல்படும் குரு டாக்டர் நிர்மலா சுந்தரராஜன் – எண்ணற்ற செயல்முறை விளக்கக் கருத்தரங்குகளை நடத்தி இருப்பவர். எம்பார் கண்ணன் – கர்நாடக இசை, திரை இசை, மேற்கத்திய செவ்வியல் இசை மூன்றிலும் நிபுணத்துவம் பெற்றவர் ஹரிகுமார் – முழு நேரம் திருச்சி அகில இந்திய வானொலியில் தன்னை ஐக்கியப் படுத்திக் கொண்டிருந்தாலும் இளம் கஞர்களை உருவாக்கி இருப்பவர். எண்ணற்ற ரசிகர்களை கொண்டிருப்பவர். பிரியதர்ஷிணி கோவிந்த் – தமிழ்நாடு, இந்தியா – வெளிநாடுகளில் பிரபலமானவர். நாட்டியத்தில் வசீகரித்திருப்பவர் பூரணம் விஸ்வநாதனுடைய பரிபூரண ஆசியில் நாடக மேடைக்கு அறிமுகம் ஆன பூவராக மூர்த்தி – கதை வசனம் இயக்கம் நடிப்பு நான்கிலும்... தன்னை உயர்த்திக் கொண்டு, ரசிகர்கள் மத்தியில் தனி வரவேற்பை பெற்றிருப்பவர். பன்முகக் கலைஞர்'' என்று பிரமிளா குருமூர்த்தி, ஐவர் பற்றியும் புகழ்ந்துரைத்தார். ஐவரிடம் தனக்கு மிகுந்த மரியாதை மட்டுமல்ல, ஒவ்வொருவரின் ரசிகை என்பதையும் பெருமிதத்தோடு கூறினார்.

### வங்கி அதிகாரிகள்

இசை விழாவிற்கு அனுசரணையாக உதவிக்கரம் நீட்டி இருக்கும் வி. அருண் (மகாராஷ்டிரா வங்கி மண்டல மேலாளர்), சந்திரப் பிரகாஷ் (இந்தியன் வங்கி துணை பொது மேலாளர்), ராஜேஷ்குமார் வர்மா (கனரா வங்கி துணை பொது மேலாளர்), ஏ. சரவணகுமார் (பரோடா வங்கி மண்டலத் தலைமை பொது மேலாளர்) ஸ்ரீ தியாக பிரம்ம கான சபாவின் வளர்ச்சியையும் இசை மற்றும் நுண்கலைகளுக்கு ஆற்றி வரும் அருண் பணிகளையும் பெருமிதத்தோடு கூறி வாழ்த்தினார்கள். எதிர்காலத்திலும் தங்களுடைய வங்கியின் ஆதரவு தொடரும் என்று உறுதி கூறினார்கள்.

விருது பெற்றவர்கள் சார்பில் எம்பார் கண்ணன் ஏற்பரையாற்றினார். முடிவில் சேஷாத்திரி (கௌரவ பொருளாளர்) நன்றி கூறினார். நிர்வாகிகள் சந்திரசேகர் (துணைத் தலைவர்), டி.கே.ரகுநாதன், ஆர். சீனிவாசன் (கௌரவ செயலாளர்கள்) உள்ளிட்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். கூல் ஈவென்ட்ஸ் குமார் தலைமையிலான இளைஞர் படை விழா வெற்றிக்கு துணை நின்றார்கள்.

### பினேஷ் மகாதேவனின் 'ருத்ரதசகம்'

விருது விழா முடிவில் வாணி கலா நிபுணா – குரு பினேஷ் மகாதேவன் குழுவினரின் "ருத்ரதசகம்" நாட்டிய நாடகம் நடந்தது. ஒன்றானவன்... என்ற வரிகளில் துவங்கி பற்றானவன் – பத்தானவன்.... பாடலோடு முடிவடையும் நாட்டிய நாடகத்தில் சிவனுடைய 10 நிலைகளையும் படம் பிடித்து காட்டினார் பினேஷ் மகாதேவன்.

இரண்டானவன் என்ற நிலையில் அர்த்தநாரீஸ்வரரும், ஆறானவன் என்ற நிலையில் திருவண்ணாமலை அருணாச்சலேஸ்வரரையும், ஏழாம் நிலையில் ராவணேஸ்வரனையும், பத்தாம் நிலையில் சிவசங்கரனையும் கண்ணெதிரில் காட்டி, பினேஷ் மகாதேவன் ஏகோபித்த பாராட்டுதலை பெற்றார். அவருடன் இணைந்து ஆடிய உமா மகேஸ்வரி (சிவன்), மோனிஷா (பார்வதி) உள்ளிட்ட 26 நடன கலைஞர்களும் பம்பரமாய் சுழன்று பாராட்டு பெற்றது அவர்களின் அதீத பயிற்சிக்கும், ஆசானின் முயற்சிக்கும் கிடைத்த வெற்றி. (இசை : ரங்கநாயகி ஜெயராமன், பாடல்கள்: சித்ரா நாராயணன்)

### 30 ஆண்டுகளுக்குப் பிறகு...

சந்திர பிரகாஷ் பேசுகையில், 30 ஆண்டுகளுக்குப் பிறகு வாணி மஹால் அரங்கிற்கு நான் வருவது இது முதல் தடவை. அப்போது இந்தியன் வங்கியின் குமாஸ்தாவாக (கிளார்க்) நான் இருந்தேன். அப்போது அதிகாரியாக இருந்தவர் கண்ணன், மோர்சிங் கலைஞர். அவரோடு நிகழ்ச்சிக்கு வருவேன். இப்போது இதே மேடையில் எனக்கு கிடைத்திருக்கும் இந்த கவுரவம் இறைவன் கொடுத்த வரம் என்று நெகிழ்ச்சியோடு கூறினார்.

### சந்திரமோகனுக்கு சுவாமிகள் பாராட்டு

நிகழ்ச்சியை அழகு தமிழில், இலக்கிய நயத்தில், எதுகை மோனையோடு சுவைபட தொகுத்து வழங்கினார் நாடக ஆசிரியர் கலைமாமணி சந்திரமோகன். அவரது உச்சரிப்பையும், அழகு தமிழையும் சுவாமிகள் மனம் திறந்து பாராட்டினார். ஆனந்தமான ஒரு சுகானுபவம் என்று அவருக்கு வாழ்த்தி அருளாசி கூறினார்.

### "இசை உபாசனை மூலம் பரமபதம் அடையலாம்...!"

இசை விழாவில் நெரூர் சாஸ்தா ஸ்ரீ ஸ்ரீவித்யா சங்கர சுவாமிகளின் ஆசி உரை, அனைவரையும் பேச வைத்தது. மடை திறந்த வெள்ளம் போல்... என்னமாய் ஒரு உரை என்று பிரமிக்க வைத்தது.

சமஸ்கிருத ஸ்லோகத்துடன் பேச்சை துவக்கியவர் வால்மீகி, ஆதிசங்கரர், சங்கீத மும்மூர்த்திகள் – தியாகராஜர் சியாமா சாஸ்திரிகள், முத்துசாமி தீக்ஷிதர் மற்றும் அருணகிரிநாதர், தமிழ் தாத்தா உ வே சாமிநாதையர்... ஆகியோரின் படைப்புகளில் இருந்து மேற்கோள் காட்டிப் பேசியவர், பார்வையாளர்களை (ஏன் மேடையில் விருது பெற்ற கலைஞர்கள் மற்றும் நிர்வாகிகள் உட்பட அனைவரையும்...) கைகட்டி மெய் பொத்தி, வைத்த கண் வாங்காமல் பார்க்க வைத்தார், நெகிழ வைத்தார்.

ஸ்ரீ தியாக பிரம்ம கான சபை ஓர் உன்னதமான சபை. அதன் கடந்த கால செயல்பாடுகள்... கலைஞர்களுக்கு ஓர் உத்வேகம் என்று குறிப்பிட்டு ஆசி கூறினார்.

நாம் ஒவ்வொருவருக்கும் குலதெய்வ ஆராதனை முக்கியம். அதுபோலவே ஊர் விசுவாசம் முக்கியம் என்று அறிவுறுத்தியவர், யோகிகள் அடையும் பரமபத ஸ்தானத்தை அடைய வைப்பது இசை. நுண் கலைகளின் உபாசனை – இசை மூலம் அனைவரும் இலகுவாக பகவானை அடைய முடியும் என்று புராதன அனுபவங்களை மேற்கோள் காட்டிப் பேசினார்.

பரம பதத்தை – மோட்சத்தை அடைவதற்கு சங்கீத மார்க்கம் மாதிரி வேறு எதுவுமே இல்லை உறுதிபடக் கூறியவர், குழந்தைகளையும் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுத்த வேண்டியது நம் அனைவரின் கடமை. அதற்கு சங்கல்பம் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

சங்கீத மும்மூர்த்திகள், சுவாதி திருநாள் உள்ளிட்ட மகான்கள் எல்லாம் பகவானுக்கு அர்ப்பணித்த சாகித்தியங்கள் இன்றளவும் அழியாமல் இருப்பதற்கு... விருது பெற்றிருக்கும் கலைஞர்கள், கௌரவித்து கலை வளர்க்கும் ஸ்ரீ தியாக பிரம்ம கான சபா உள்ளிட்ட சபாக்கள் அடி ப்படை காரணம், ஆதார சுருதி என்று மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டு, கலைகள் மலர வேண்டும், கலைஞர்கள் வளர வேண்டும் என்று ஆசி கூறினார்.




செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் செங்கல்பட்டு மக்கள் நல்வாழ்வுத்துறை மூலம் உலக வாசக்டமி தின இருவார விழிப்புணர்வு ரதத்தினை கலெக்டர் அருண்ராஜ் கொடியசைத்து துவக்கி வைத்தார். இதில் செங்கல்பட்டு மருத்துவக்கல்லூரி முதல்வர் ஜி.சிவசங்கர், இணை இயக்குனர் தீர்த்தலிங்கம், மருத்துவமனை கண்காணிப்பாளர் ஜோதிமலர் மற்றும் செயலக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# சென்னை துறைமுகத்திலிருந்து கப்பல் மூலம் அரிசி ஏற்றுமதி: 15 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் தொடக்கம்

சென்னை, டிச 10–

**சென்னை துறைமுகத்திலிருந்து, 15 ஆண்டுகளுக்குப் பிறகு கப்பல்கள் மூலம் அரிசி ஏற்றுமதி மீண்டும் தொடங்கியது.**

அரிசி மீதான கட்டுப்பாடுகள், குறைந்தபட்ச ஏற்றுமதி விலை நிர்ணயம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் சென்னை துறைமுகத்திலிருந்து கப்பல்கள் மூலம் அரிசி ஏற்றுமதி செய்வது முற்றிலுமாக நிறுத்தப்பட்டது.

இந்நிலையில், கடந்த அக்டோபர் 20ந் தேதி இந்தியாவிலிருந்து அனைத்து வகை அரிசி ஏற்றுமதி செய்வதற்கு மத்திய அரசு அனுமதி அளித்து அறிவிப்பு வெளியிட்டது. இதைத்தொடர்ந்து, 15 ஆண்டுகளுக்குப் பிறகு சென்னை துறைமுகத்திலிருந்து 'எம். வி.வான்.ஹே' சரக்குக் கப்பலில் இந்தோனேசியாவிற்கு 5,100 மெட்ரிக் டன் அரிசி மூட்டைகள் அனுப்பப்பட்டது.



இது குறித்து துறைமுக போக்குவரத்து மேலாளர் எஸ். கிருபானந்தசாமி கூறுகையில், 'சென்னை துறைமுகத்தில் புதிதாக சுமார் 2 லட்சம் மெட்ரிக் டன் சரக்குகளை இருப்பு வைக்கும் அளவுக்கு ரூ. 25 கோடியில் சேமிப்புக் கிடங்குகள் புதிதாக அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. பழைய சேமிப்புக் கிடங்குகளை சீரமைப்பதன் மூலம் துறைமுகத்தின் கிடங்கு கொள்ளளவு திறன் சுமார் 8 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரிக்கும். இதற்காக, ரூ.52 கோடி செலவில் பழைய கிடங்குகளை புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதன் மூலம் ஒட்டுமொத்த சரக்குகளைக் கையாளும் திறன் தொடர்ந்து அதிகரித்து வருகிறது' என்றார்.

15 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் அரிசி ஏற்றுமதி தொடங்கியுள்ள நிலையில், துறைமுக அதிகாரிகள் உள்ளிட்டோரை சென்னை துறைமுகத் தலைவர் சுனில் பாலிவால் நேரில் அழைத்து பாராட்டு தெரிவித்தார். தொடர்ந்து இதுபோன்று பல புதிய சாதனைகளை எட்டுவதற்கு தொடர் முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

**பெயர் மாற்றம்**

நான்,
**A.V. SABARISH SUBRAMANIAM**
த/பெ A.S. Vijayaragavan,
பிறந்த தேதி: 09.11.2000
பிறந்த இடம்: சென்னை,
வசிப்பிடம் எண். 13,
நீல்கமல் அபார்ட்மெண்ட்ஸ்,
9/23, 3வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையார்,
சென்னை - 600 020.
இனி முதற்கொண்டு
**SABARISH SUBRAMANIAM**
என்று அழைக்கப்படுவேன்.

**A.V. SABARISH SUBRAMANIAM**

**மாண்புமிகு மூன்றாவது கூடுதல் முதன்மை நீதிபதி குடும்ப நல நீதிமன்றம், சென்னை.**
**M.C.No. 540 of 2024**

ர. நிவேதா, (வ/32) த/பெ. ரவி, க.எண். 34/68, நரசியார் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை - 600021. ... வாதி

-எதிர்-

கோ. தாஸ் பிரகாஸ், (வ/32) த/பெ. கோதண்டபாண்டி, க.எண். 36/67, நரசியார் தெரு, பழைய வண்ணாரபேட்டை, சென்னை - 600021. ... பிரதிவாதி

**அறிவிப்பு**

இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிப்பது யாதெனில் மேற்படி வழக்கானது பிரதிவாதி தங்களின் வருகைக்காக வரும் 06.01.2024 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. எனவே தாங்கள் நேரிலோ அல்லது தங்கள் வழக்கறிஞர் மூலமாக மேற்படி நீதிமன்றத்தில் மேற்படி தேதியன்று காலை 10.30 மணிக்கு ஆஜராகி தங்கள் தரப்பு வாதங்களை தெரிவிக்க அறிவுறுத்தப்படுகிறீர். அவ்வாறு ஆஜராகத் தவறினால் மேற்படி வழக்கானது தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பளிக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

D. சரவணகுமார்,
D. ஆர்த்தி,
வழக்கறிஞர்கள்.

**BEFORE THE CENTRAL GOVERNMENT**
The Registrar of Companies
[Tamil Nadu] Chennai.

In the matter of sub-section (3) of Section 13 of Limited Liability Partnership Act, 2008 and rule 17 of the Limited Liability Partnership Rules, 2009 In the matter of the Limited Liability Partnership Act, 2008, Section 13 (3) AND In the matter of M/s ONE ENERGY WAREHOUSE LLP [LLPIN: ABC-6897 ] having its registered office at No.6/2,CASA Blanca, Ground Floor, Casa Major Road, Egmore, Ethiraj Salai, Chennai, Tamil Nadu, India, 600008 Petitioner Notice is hereby given to the General Public that the LLP proposes to make a petition to Registrar of Companies [Tamil Nadu] Chennai under section 13 (3) of the Limited Liability Partnership Act, 2008 seeking permission to change its Registered office from the state of " Tamil Nadu " to the state of " Andhra Pradesh ". Any person whose interest is likely to be affected by the proposed change of the registered office of the LLP may deliver or cause to be delivered or send by Registered post of his/her objections supported by an affidavit stating the nature of his/her interest and grounds of opposition supported by an affidavit to the Registrar of Companies, Ministry of Corporate Affairs , Block No.6,B Wing 2nd Floor, Shastri Bhawan 26, Haddows Road,Chennai - 600034, Tamil Nadu , within 21( twenty one) days from the date of publication of this notice with a copy to the petitioner LLP at its registered office at the address mentioned above.

For and on behalf of
**ONE ENERGY WAREHOUSE LLP**
Sd/-
**AMIT DAMODAR**
(DIN: 01720034)
Designated Partner

Date: 02.12.24
Place: Chennai

**IN THE HIGH COURT OF JUDICATURE, AT MADRAS (Appellate Jurisdiction) C.M.A.No. 1301 of 2019**

N.Prema, W/o.K.Natarajan, No.28, Kannagi Nagar, First Floor, Near Vellaiamman Koil, Guduvancherry, Chengalpet Taluk. ...Appellant

Vs.

K.Natarajan, S/o.Krishnamurty No.13/67, Periyar Street, Thailavaram, Kattankulathur Post, Chengalpet Taluk, At present residing at K.Natarajan S/o.Krishnamurthy No.3/232, Therady Kamarajar Street, Singaperumal Koil, Pincode-603 204. ...Respondent

To
K.Natarajan, S/o.Krishnamurty No.13/67, Periyar Street, Thailavaram, Kattankulathur Post, Chengalpet Taluk, At present residing at K.Natarajan, S/o.Krishnamurthy No.3/232, Therady Kamarajar Street, Singaperumal Koil, Pincode-603 204.

The above named appellant filed the above appeal against you in C.M.A.No.1301/2019 on the file of High Court of Madras against the order and decreetal order passed in FCOP.No.149/2015 dated 15.11.2016 on the file of Family Court, Chengalpattu dissolving the marriage of the appellant and respondent.

The above appeal is being posted for your appearance on 3.1.2025 at 10.30 am. Make yourself be present or through your pleader on 3.1.2025 at 10.30 am failing which the above matter will be heard in your absence. This is for your information.

**G.MOHANARANGAN**
Advocate

THE SAVERA — OUR BUSINESS IS YOU

**சவேரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்**

பதிவு அலுவலகம் : 146, டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, மைலாப்பூர், சென்னை - 600 004.
CIN No.: L55101TN1969PLC005768 இணையதளம் : www.saverahotel.com
தொலைபேசி : 91-44-2811 4700; ஃபேக்ஸ் : 91-44-28113475; இ-மெயில் : cs@saverahotel.com

**அறிவிப்பு**

**(சவேரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்டின் சமபங்குதாரர்களின் கவனத்திற்கு)**
**செலுத்தப்படாத/கோரப்படாத டிவிடெண்ட் மற்றும் கம்பெனியின் சமபங்குகளை முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (ஐஇபிஎப்) கணக்கிற்கு மாற்றம் செய்தலுக்காக**

கம்பெனிகள் சட்டம் 2013 ('சட்டம்') பிரிவு 124 (6) மற்றும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கியல், தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திரும்ப அளித்தல்) திருத்த விதிகள் 2017 (விதிகள்) விதி 6-ன்படி, இந்த அறிவிப்பு அறிவிக்கப்படுகிறது.

சட்டப்பிரிவு 124(6) மற்றும் விதிகளின் விதி 6-ன் படி, கோரப்படாத டிவிடெண்டை உடைய அனைத்து பங்குகளும் மற்றும் தொடர்ந்து கடந்த ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக (தொடர்புடைய பங்குகள்) பங்குதாரர்களால் பணமாக பெறப்படாத டிவிடெண்ட் வாரண்ட் உடைய பங்குகள் ஏதேனும் இருப்பின் அவையும் சட்டத்தின் கீழ் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு (ஐஇபிஎப்) மாற்றப்படும் மற்றும் விதிகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்டபடி ஐஇஎப் டீமேட் கணக்கில் கம்பெனியால் வரவு வைக்கப்படும்.

2017-18 நிதி ஆண்டுக்கான டிவிடெண்ட் (இடைக்கால டிவிடெண்ட் 2017-18)16 மார்ச் 2025 அன்று வரையான தொடர்ந்து ஏழு ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாக கோரப்படாத பட்சத்தில் அவை ஐஇபிஎப்-பிற்கு மாற்றப்படும். மேலும், பங்குகளை வைத்திருக்கும் பங்குதாரர்கள் 2017-18 ஆண்டுக்கான டிவிடெண்ட் வாரண்டை பணமாக பெறாதவர்கள் மற்றும் தொடர்ந்து கடந்த ஏழு ஆண்டுகள் பங்குதாரர்களால் பணமாக பெறப்படாத டிவிடெண்ட் வாரண்ட் உடைய பங்குகள் ஆகியவை சட்டம், விதிகளின் கீழ் ஐஇபிஎப்-பிற்கு மாற்றப்படும். கூறப்பட்ட ஐஇபிஎப்-பிற்கு பங்குகளை மாற்றுவதற்கான தேதி 16, மார்ச் 2025. 2017-18 நிதியாண்டிற்கான டிவிடெண்ட் கோராத பங்குதாரர்களின் விவரங்கள் மற்றும் அவர்கள் வைத்துள்ள பங்குகளின் விவரங்கள் கம்பெனியின் இணையதளம் **www.saverahotel.com**-ல் உள்ளது. இது சம்பந்தமாக தனித்தனியே கடிதங்களை கம்பெனி அனுப்பி வருகிறது. அந்த பங்குகள் மீது சேர்ந்துள்ள பலன்கள் ஏதேனும் இருப்பின் அவை அனைத்தும் விதிகளின்படி ஐஇபிஎப்-பிற்கு மாற்றப்படும். விதிகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றிய பின்னர் சேர்ந்துள்ள அனைத்து பலன்களுடன் கூடிய பங்குகளை அவ்வப்போது ஐஇபிஎப்-பிலிருந்து பங்குதாரர்கள் கோரி பெறலாம். விதிகளின்படி ஐஇபிஎப்-பிற்கு மாற்றப்பட்ட கோரப்படாத/செலுத்தப்படாத டிவிடெண்டுகள் மற்றும் பங்குகளை பெற கம்பெனிக்கு எதிராக எந்த உரிமையும் கோர இயலாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

காகித வடிவத்தில் வைத்திருக்கும் பங்குகள் ஐஇபிஎப்-பிற்கு மாற்றப்பட வேண்டியிருந்தால், ஐஇபிஎப்-பிற்கு மாற்றுவதற்கான புதிய பங்கு சான்றிதழ்(களை) கம்பெனி வழங்கும் மற்றும் அத்தகைய புதிய பங்கு சான்றிதழ்களை வழங்கும்போது, அசல் பங்கு சான்றிதழ்(கள்) ரத்தாகிவிடும். எனவே வர்த்தகம் மேற்கொள்ள முடியாது, ஒருவேளை பங்குகளை டீமேட் வடிவில் வைத்திருந்தால், ஐஇபிஎப்-பிற்கு பங்குகளை மாற்ற, பங்குதாரர்கள் டீமேட் கணக்கு வைத்திருக்கும் டெபாசிட்டரிக்கு அது குறித்து நிறுவன நடவடிக்கை மூலம் கம்பெனி தெரிவிக்கும்.

ஐஇபிஎப்-பிற்கு மாற்றப்பட உள்ள பங்குகளின் விவரங்கள் கம்பெனியின் இணைதளத்தில் இருக்கும். ஐஇபிஎப்-பிற்கு பங்குகளை மாற்றும் நோக்கத்திற்காக கம்பெனியினால் வழங்கப்பட்ட புதிய பங்கு சான்றிதழ்களுக்கான அறிவிப்பாக அது கருதப்படும். இது தொடர்பாக தனியாக எந்த அறிவிப்பும் வழங்கப்படமாட்டாது.

இது தொடர்பாக பங்குதாரர்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருப்பின், அது குறித்து கம்பெனி மற்றும் கம்பெனியின் பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவர்.மெசர்ஸ் கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், சுப்ரமணியம் பில்டிங், எண்.1, கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை - 600 002, தொலைபேசி எண். : 044 - 28460390, இமெயில் : **iepf@cameoindia.com**-க்கு எழுதலாம்.

**சவேரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்-காக**

இடம் : சென்னை
தேதி : 10.12.2024

**R சித்தார்த்**
கம்பெனி செயலாளர்

**JMJ பின்டெக் லிமிடெட்**

(முன்னர் மீனாட்சி எண்டர்பிரைசஸ் லிமிடெட் என அழைக்கப்பட்டது)
CIN:L51102TZ1982PLC029253

பதிவு அலுவலக முகவரி: கடை எண். 3, 1வது தளம், ஆதி விநாயக வளாகம், எண். 3, பேருந்து நிலையம், கோபால்சாமி கோயில் தெரு, கணபதி, கோயம்புத்தூர், கோயம்புத்தூர் வடக்கு, தமிழ்நாடு, இந்தியா 641006
மின்னஞ்சல்: investor@jmjfintechltd.com இணையதளம்: www.jmjfintechltd.com

**தபால் வாக்கு அறிவிப்பு மற்றும் தொலைதூர மின்– வாக்களிப்பு தகவல்**

அன்புள்ள உறுப்பினர்களே,

நிறுவனங்கள் சட்டம், 2013 ("சட்டம்") பிரிவு 108 மற்றும் பிரிவு 110 மற்றும் பிற பொருந்தக்கூடிய விதிகள் ஏதேனும் இருந்தால் மற்றும் நிறுவனங்கள் (மேலாண்மை மற்றும் நிர்வாகம்) விதிகள், 2014 ("விதிகள்") விதி 20 மற்றும் விதி 22 மற்றும் செக்யூரிட்டிஸ் அண்ட் எக்ஸ்சேஞ்ச் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப் பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) ஒழுங்குமுறை 2015 ('செபி பட்டியலிடுதல் விதிமுறைகள்')ன் ஒழுங்குமுறை 44 மற்றும் பொதுக் கூட்டங்கள் மீது இந்திய நிறுவனச் செயலாளர்கள் நிறுவனம் வழங்கிய செயலகத் தரநிலைகள் மற்றும் செப்டம்பர் 25, 2023 தேதியிட்ட பொதுச் சுற்றறிக்கை எண். 09/2023ன்படி கார்ப்பரேட் விவகார அமைச்சகம் ('MCA') வழங்கிய தளர்வுகள் மற்றும் விளக்கங்கள் மற்றும் இது தொடர்பாக வெளியிடப்பட்ட முந்தைய சுற்றறிக்கைகள் ("MCA சுற்றறிக்கைகள்") மற்றும் பிற பொருந்தக்கூடிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இணங்க, புதன்கிழமை, நவம்பர் 27, 2024 தேதியிட்ட தபால் வாக்கு அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள சிறப்பு வணிகத்தில் தொலைதூர மின்–வாக்களிப்பு மூலம் மட்டுமே தபால் வாக்கு மூலம் உறுப்பினர்களின் ஒப்புதலை JMJ பின்டெக் லிமிடெட் (''நிறுவனம்'') பெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

MCA சுற்றறிக்கைகளுக்கு இணங்க, டெபாசிட்டரி பங்கேற்பாளர்கள் அல்லது பதிவாளர் மற்றும் பங்கு பரிமாற்ற முகவருடன் (RTA) அதாவது பூர்வா ஷேர்ஜிஸ்ட்ரி (இந்தியா) பிரைவேட். லிமிடெட்டில் பதிவு செய்தபடி உறுப்பினர்களுக்கு அவர்களின் மின்னஞ்சல் முகவரிக்கும், கட் ஆப் தேதியான வெள்ளிக்கிழமை, நவம்பர் 06, 2024 அன்று உறுப்பினர்களின் பதிவேடு/ டெபாசிட்டரிகளின் பதிவேட்டில் உள்ள பெயர்களில் இருப்பவர்களுக்கும் திங்கட்கிழமை, டிசம்பர் 09, 2024 அன்று விளக்க அறிக்கையுடன் தபால் வாக்கு அறிவிப்பை நிறுவனம் மின்னணு முறையில் அனுப்பியுள்ளது. இந்த தபால் வாக்குக்காக, தபால் வாக்கு படிவங்கள் மற்றும் ப்ரீபெய்டு வணிக உறை ஆகியவற்றுடன் தபால் வாக்கு கடின நகல் உறுப்பினர்களுக்கு அனுப்பப்படாது. தபால் வாக்கு குறித்த அறிவிப்பு நிறுவனத்தின் இணையதளம் www.jmjfintechltd.com, CDSLன் இணையதளம் www.evotingindia.com மற்றும் BSE லிமிடெட்டின் இணையதளம் www.bseindia.comல் கிடைக்கிறது. கட்ஆப் தேதியின்படி உறுப்பினராக இல்லாத ஒருவர், தகவல் நோக்கங்களுக்காக மட்டுமே அவரது தபால் வாக்கை கையாள வேண்டும்.

நிறுவனம் அதன் அனைத்து உறுப்பினர்களுக்கும் தொலைதூர மின்–வாக்களிக்கும் வசதியை வழங்கும் நோக்கத்திற்காக சென்ட்ரல் டெபாசிட்டரி சர்வீசஸ் (இந்தியா) லிமிடெட் ("சிடிஎஸ்எல்") சேவைகளில் ஈடுபட்டுள்ளது. தொலைதூர மின்–வாக்களிப்புக்கான தேவையான வழிமுறைகள் புதன்கிழமை, நவம்பர் 27, 2024 தேதியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன.

மின்னணு வாக்குப்பதிவு காலம் செவ்வாய்க்கிழமை, டிசம்பர் 10, 2024, அன்று இந்திய நேரப்படி காலை 09:00 மணிக்கு தொடங்குகிறது மற்றும் புதன்கிழமை, ஜனவரி 08, 2025 அன்று இந்திய நேரப்படி மாலை 05:00 மணிக்கு முடிவடைகிறது. இந்தக் காலக்கட்டத்தில், கட் ஆப் தேதியான வெள்ளிக்கிழமை , நவம்பர் 06, 2024 அன்று பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் மின்னணு முறையில் வாக்களிக்கலாம். அதன் பின்னர் மின்னணு வாக்குப்பதிவிற்கான மின்னணு முறை சிடிஎஸ்எல்–ஆல் முடக்கப்படும் மற்றும் குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்கு மேல் மின்னணு வாக்குப்பதிவு அனுமதிக்கப்படாது. உறுப்பினர்களின் வாக்களிக்கும் உரிமையானது, கட் ஆப் தேதியின்படி நிறுவனத்தின் செலுத்தப்பட்ட ஈக்விட்டி பங்கு மூலதனத்தில் உள்ள அவர்களின் பங்குகளின் விகிதத்தில் இருக்கும். ஒரு தீர்மானத்தின் மீது உறுப்பினர் ஒருமுறை வாக்களித்த பின், அதை மாற்றவோ அல்லது மீண்டும் வாக்களிக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்.

**மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்யும்/புதுப்பிக்கும் முறை:**

தபால் வாக்கெடுப்பு அறிவிப்பைப் பெறுவதற்காக உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்ய/புதுப்பிப்பதற்காகக் கீழ்க்கண்ட முறைகளைக் கவனிக்கவும் பின்பற்றவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

1 காகித முறையில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள், மின்னஞ்சல் முகவரி, கையொப்பமிடப்பட்ட கோரிக்கைக் கடிதம், சுய சான்றளிக்கப்பட்ட பான் மற்றும் ஆதார் மற்றும் பங்குச் சான்றிதழின் நகல் உள்ளிட்ட KYC விவரங்களைப் புதுப்பிக்க படிவம் ISR –1, படிவம் ISR–2, படிவம் ISR–3 / படிவம் SH–13 ஆகியவற்றின் ஸ்கேன் செய்யப்பட்ட நகலை support@purvashare.com அல்லது evoting@purvashare.com என குறிக்கப்பட்ட மின்னஞ்சலை அனுப்புவதன் மூலம் தங்கள் மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யலாம்/புதுப்பிக்கலாம். உரிய சரிபார்ப்புக்குப் பிறகு, உறுப்பினர்களுக்கு தபால் வாக்கு அறிவிப்பு அனுப்பப்படும்.

2. டிமெட்டீரியலைஸ்ட் படிவத்தில் பங்குகளை வைத்திருக்கும் உறுப்பினர்கள் தங்கள் மின்னஞ்சலைப் பதிவு செய்வதற்காக அவர்களது டெபாசிட்டரி பங்கேற்பாளர்களை ('DP's') தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் மற்றும் மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்வதற்கு DPகள் வகுத்துள்ள செயல்முறையைப் பின்பற்ற வேண்டும். தங்கள் டிபிகளுடன் கட்ஆப் தேதிக்குப் பிறகு மின்னஞ்சல் முகவரியைப் பதிவு செய்தல்/புதுப்பித்ததன் விளைவாக, உறுப்பினர்கள் support@purvashare.com அல்லது evoting@purvashare.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் எழுதுவதன் மூலம் நிறுவனம்/ஆர்டிஏவுக்குத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஏதேனும் கேள்விகள் இருந்தால், பங்குதாரர்களுக்கான அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQகள்) மற்றும் பங்குதாரர்களுக்கான மின்வாக்களிப்பு பயனர் கையேடட்டை www.evotingindia.comன் பதிவிறக்கப் பிரிவில் காணலாம் அல்லது 1800225533 என்ற எண்ணை அழைக்கலாம் அல்லது helpdesk.evoting @cdslindia.com. க்கு கோரிக்கையை அனுப்பலாம்.

**குழுவின் ஆணைப்படி**
**JMJ பின்டெக் லிமிடெட்டுக்காக**
**ஒப்பம்/– வித்யா தாமோதரன்**
**நிறுவன செயலாளர் மற்றும் ஒப்புதல் அதிகாரி**
**உறுப்பினர் எண். 69509**

**இடம்: கோயம்புத்தூர்**
**தேதி: 09.12.2024**